வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 3227/அ3/2024, நாள். 31.03.2025

----

பொருள் : பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு/ நகரவை / மாதிரி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் – 01.08.2024 அன்றைய நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிட நிர்ணயம் செய்தமை – ஆசிரியரின்றி உபரியாக உள்ள காலிப்பணியிடங்கள் இயக்குநரின் பொதுத் தொகுப்பிற்கு சரண் செய்தது – ஏற்பளித்து ஆணை வழங்கிய விவரங்கள் அனுப்புதல் – தொடர்பாக.

பார்வை :

1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 048350/சி3/இ1/2024, நாள். 05/08/2024.
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 048350/சி3/இ1/2024, நாள். 27/03/2025.

•••••

பார்வை (1)இல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை அரசு/நகரவை/மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 06 முதல் 10ஆம் வகுப்புகள் வரை உள்ள 01.08.2024 அன்றைய நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிட நிர்ணயம் செய்யப்பட்டு, ஆசிரியரின்றி உபரியாக உள்ள காலிப்பணியிடங்கள் இயக்குநரின் பொதுத் தொகுப்பிற்கு சரண் செய்யப்பட்டது.

பார்வை (2)இல் காணும் செயல்முறைகளில் சரண் செய்த காலிப்பணியிடங்கள் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் ஏற்பளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இணைப்பில் உள்ள அவ்விவரங்களை சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் உறுதி செய்து, பள்ளியின் அளவுகோல் பதிவேட்டில் (Scale

Register) செயல்முறை ஆணை எண் மற்றும் நாள் ஆகிய விவரங்களுடன் இயக்குநரின் பொதுத் தொகுப்பிற்கு சரண் செய்யப்பட்டது என பதிவு செய்து அசல் அளவுகோள் பதிவேடு மற்றும் தலைமையாசிரியர் கையொப்பமிட்ட நகல் ஒன்றினை இவ்வலுவலக அ3 பிரிவில் தனிநபர் மூலம் 04.03.2025 அன்று நேரில் சரிபார்த்து சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இணைப்பில் உள்ள (ஆசிரியரின்றி உபரி) பணியிடங்களை வருங்காலங்களில் காலிப் பணியிடங்களாகவோ, அனுமதிக்கப்பட்ட பணியிடங்களாகவோ கருதக்கூடாது என சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – ஆசிரியரின்றி உபரி காலிப்
பணியிடங்கள் சரண் செய்த
விவரம் – பாட வாரியாக

முதன்மைக்கல்வி அலுவலர், (பொ)
வேலூர்.

பெறுநர்,
சார்ந்த அரசு/நகராட்சி/மாதிரி
உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்,
மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை)
வேலூர் மாவட்டம்.